# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை—600 032.
தொலைபேசி: 044—22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை—600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப, (ஓ),
*************

முறையீட்டு மனு எண் 440/2016/பேடீ2

ஆணை எண்.294 /2017/ நாள் – 22-12-2017

திரு. அ நாராயணன்,
116—ஏ, வாசவி ரைஸ் மில் தெரு,
சங்கராபுரம் அஞ்சல் (ம) தாலூக்கா,
விழுப்புரம் மாவட்டம் – 606 401

—— முறையீட்டு மனுதாரர்.

திரு எஸ்.ஏ. கிருஷ்ணமூர்த்தி,
முன்னாள் பேரூராட்சி மன்றத் தலைவர்,
சங்கராபுரம் பேரூராட்சி,
விழுப்புரம் மாவட்டம்.

——— எதிர் மனுதாரர்.

## ஆணை

விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் பேரூராட்சியினை சேர்ந்த திரு அ. நாராயணன் என்பவரின் 23.09.02013 ம் தேதியிட்ட முறையீட்டு மனு பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 15354/2013/இ.2/நாள் 10.05.2016 உடன் இணைத்து தக்க நடவடிக்கைக்காகவும் விசாரணைக்காகவும் 17.05.2016 அன்று இம்முறைமன்ற நடுவத்திற்கு வரப்பெற்றது. இம்மனு முறையீட்டு மனு எண் 440 ஆக பதிவு செய்யப்பட்டது.

முறையீட்டு மனுவினை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவம் (மனுதாக்கல் வழிமுறை, விசாரணை மற்றும் இறுதி செய்தல்) விதிகள். 2015, விதி 6 ல் நிர்ணயித்தவாறு கட்டணம் ரூ 10/—க்கான நீதி மன்ற வில்லையுடன் உரிய படிவத்தல் ( படிவம் 1 ) பூர்த்தி செய்து அனுப்ப அறிவிப்பாணை அனுப்பப்பட்டது. இதன்படி முறையீட்டு மனுதாரர் தனது மனுவினை உரிய முறையில் 02.06.2016ல் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் பேரூராட்சி மன்றத்தின் முன்னாள் தலைவர் திரு எஸ். ஏ. கிருஷ்ணமூர்த்தி என்பவர் மீது கீழ்கண்ட குற்றச்சாட்டுகளை தெரிவித்துள்ளார்.

1. இப்பேரூராட்சியில் பணிபுரியும் செயல் அலுவலர் மற்றும் இதர பணியாளர்களை தன்னுடைய கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரியவேண்டும் என மிரட்டுவது,
2. பேரூராட்சியில் கட்டப்பட்டு வரும் வீடுகளுக்கான வரை பட அனுமதிக்கான தொகையை பெற்றுக் கொண்டு அனுமதியின்றி வீடு கட்டிக் கொள்ள அனுமதிப்பது,
3. பேரூராட்சி எல்லைக்குள் உள்ள வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்க தலைவர் நேரடியாக தலையிட்டு உரிமையாளர்களிடம் பணத்தை பெற்றுக் கொண்டு ரசீது வழங்காமல் தினக்கூலி பணியாளர்களைக் கொண்டு குடிநீர் இணைப்பு வழங்குவது.
4. பேரூராட்சிக்கு சொந்தமான சந்தை மற்றும் மற்ற வசூல் இனங்களை அரசு விதிமுறைகளின்படி பொது ஏலம் விடாமல் தன்னுடைய சுயலாபத்தின்பேரில் நிர்வாகத்தின் மூலம் தொகையினை வசூலித்து அதில் ஒரு பகுதியினை தானே எடுத்துக் கொள்வது.
5. பேரூராட்சி மன்றக் கூட்ட விவரங்களை உரிய காலத்தில் மன்ற உறுப்பினர்களுக்கு தெரிவிக்காமலும், பேரூராட்சி அலுவலக இருப்பு அறைக்கான சாவியை தானே வைத்துக் கொண்டு பல முறைகேடுகளை செய்து வருவது.
6. பேரூராட்சி நிர்வாகம் தவிர இதர நிர்வாகங்களின் விவரங்களை கையில் எடுத்துக் கொண்டு பேரூராட்சி மன்றத்திற்கு தவறான தகவல்களை அளித்து பேரூராட்சிமன்ற உறுப்பினர்களை திசை திருப்புவது.
7. பேரூராட்சியில் இரண்டு தினக்கூலி பணியாளர்களை தலா ரூ 1.50 லட்சம் பெற்றுக் கொண்டு பணியமர்த்தியும் அவர்களை தன்னுடைய சொந்த வேலைக்கு வைத்துக் கொள்வது.
8. 11-வது வார்டில் உள்ள பொய்க்குணம் ரோட்டில் கிழக்காக ஓடிவரும் ஓடையை பேரூராட்சிக்கு பயன்படுத்தவேண்டும் என 03.11.2011ல் தீர்மானம் வைத்து ஓடையினை ஆக்கிரமித்தவர்களை மிரட்டி பணம் பெற்றுள்ளதாகவும், சங்கராபுரம் காலனிக்கு அருகில் சர்வே எண் 19-1, 19-6 உள்ள புறம்போக்கு நிலத்தினை பேரூராட்சிக்கு சொந்தமானது என 09.01.2013ல் தீர்மானம் இயற்றி அந்த இடத்தின் பின்புறம் ரியல் எஸ்டேட் உரிமையாளர்களிடம் பல இலட்சம் பெற்றுக் கொண்டு அந்த இடத்தினை அவர்களிடமே கொடுத்துவிட்டதாகவும் புகார் கூறப்பட்டுள்ளது.
9. பேரூராட்சி பேருந்து நிலையத்தின் உள்ளேயும், வெளியேயும் உள்ள காலி இடங்களை பணம் வாங்கி கொண்டு அந்த இடங்களுக்கான வாடகையினை வாங்கி வருவது.
10. பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் நபர்களிடம் வீடு கட்ட நிலப்பட்டா வாங்கி தருவதாக பணம் பெற்றுக் கொண்டு வனத்துறை மற்றும் சிப்காட் அமைப்பு இடத்தினை அளந்து கொடுத்துவிட்டு பின்னர் அந்த இடத்தினை சம்பந்தப்பட்ட துறையினரால் ஆக்கிரமிப்பு என அகற்றப்பட்டது.

11. ரூ. 19.25 லட்சம் செலவில் மாற்றுத் திறனாளிகளுக்கான கழிப்பிடப் பணியினை ஆற்றுப்பாதை தெருவின் கடைசியில் கட்டி பயன்படுத்த முடியாத அளவிற்கு செய்துள்ளதாகவும் தனது மனுவில் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து மேற்கண்ட முறையீட்டு மனு தொடர்பாக மனுதாரரின் நேரடி விளக்கம் பெற இம்முறைமன்ற நடுவத்தில் 28.07.2016 ல் ஆஜராகக் கோரி இம்முறைமன்ற நடுவ 09.06.2016 ம் நாளிட்ட அழைப்பாணை மூலம் ஆணையிடப்பட்டது.

மேற்படி விசாரணைக்கு முறையீட்டு மனுதாரர் ஆஜராகாத நிலையில் மற்றொரு வாய்ப்பு அளித்து 06.09.2016ல் நேரில் ஆஜராக முறையீட்டு மனுதாரருக்கு இம்முறைமன்ற நடுவ 02.08.2016 நாளிட்ட அழைப்பாணை மூலம் ஆணையிடப்பட்டது.

இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண் 440/2016/பே.2/நாள் 06.09.2016, ன் மூலம் முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கக் கோரி சங்கராபுரம் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

பேரூராட்சி செயல் அலுவலர், சங்கராபுரம், தனது கடித எண்.255/அ.1/நாள் 15.09.2017ல் மேற்படி புகார் மனுவிற்கான விளக்க அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

சங்கராபுரம் பேரூராட்சி செயல் அலுவலரின் நேரடி விளக்கம் பெறும் பொருட்டு இம்முறைமன்ற நடுவத்தில் 05.02.2018 ல் ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவ எண் 440/2016/பே.2/நாள் 04.12.2017ன் மூலம் அழைப்பாணை அனுப்பப்பட்டது.

இந்நிலையில் முறையீட்டு மனுதாரர் திரு அ. நாராயணன், தனது 15.10.2017ம் நாளிட்ட கடிதத்தில் தான் விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் பேரூராட்சி மன்ற முன்னாள் தலைவர் திரு. எ.எஸ். கிருஷ்ணமூர்த்தி என்பவர் மீது பல்வேறு முறைகேடுகளை தெரிவித்து விசாரணை கோரி புகார் அனுப்பியதாகவும், சங்கராபுரம் பேரூராட்சியில் நிரந்தர செயல் அலுவலர்கள் இல்லாமல் பொறுப்பு செயல் அலுவலர்களே பணியில் இருந்ததால் தனது புகார்களுக்கு விளக்கம் அளிக்கவில்லை எனவும் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். மேலும் தற்போது சங்கராபுரம் பேரூராட்சியில் பொறுப்பு செயல் அலுவலராக பணிபுரிந்து வரும் திரு ச.ஆறுமுகம் என்பவர் கடந்த 05.10.2017 அன்று தனது புகார் மனுவில் தெரிவித்துள்ள குறைபாடுகளுக்கு உரிய விளக்கத்தினையும், அதற்கான ஆவணங்கள் மற்றும் பதிவேடுகளையும் காண்பித்ததாகவும் தெரிவித்துள்ளார். இதன் அடிப்படையில் தனது மனுவில் குறைபாடாக தெரிவிக்கப்பட்டுள்ள சொத்துவரி விதிப்பு, குடிநீர் இணைப்பு மற்றும் கட்டிட உரிமம் ஆகியவற்றிற்கு உரிய கட்டணங்கள் சம்பந்தப்பட்ட உரிமைதாரர்களால் முறைப்படி பேரூராட்சியில் செலுத்தப்பட்டுள்ளதாகவும், மேலும் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதை அறிந்ததாகவும் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். மேலும் அரசால் அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் பணிபுரியும் பணியாளர்களை தவிர முறையற்ற முறையில் எவரும் பணியமர்த்தப்படவில்லை எனவும், மாற்றுத் திறனாளிகளுக்கான கழிவறை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு உள்ளது எனவும் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். எனவே தனது மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகளின் நிலையினை

அறிந்து கொண்டதால் இந்த மனுவின் விசாரணையில் இருந்து தன்னை விடுவித்து மனுவினை முடிவிற்கு கொண்டு வரவும் தனது கடிதத்தில் வேண்டியுள்ளார்.

இந்நேர்வில் மனுதாரரின் முறையீட்டு மனு, செயல் அலுவலரின் விளக்க கடிதம் மற்றும் மனுதாரரின் 15.10.2017ம் நாளிட்ட கடிதம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் பரிசீலிக்கப்பட்டன. இவ்வினத்தில் மனுதாரரே தனது புகார்கள் குறித்தான விளக்கங்களையும், நடவடிக்கைகளையும் பேரூராட்சியிடமிருந்து பெற்றுக் கொண்டதையும் அவர் தனது மனுவினை முடிவுக்கு கொண்டு வருமாறு வேண்டியுள்ளதையும் ஏற்று இம்முறையீட்டு மனு மீதான நடவடிக்கை கைவிடப்படலாமென முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017ம் ஆண்டு டிசம்பர் திங்கள்22– ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

**உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவர்**

**–//உத்திரவின்படி – அனுப்பப்படுகிறது//–**

செயலாளருக்காக

பெறுநர்

1.திரு அ. நாராயணன்,
116, ஏ–1 வாசவி ரைஸ் மில் தெரு,
சங்கராபுரம் – 606401
விழுப்புரம் மாவட்டம்.

2.செயல் அலுவலர்,
சங்கராபுரம் பேரூராட்சி,
விழுப்புரம் மாவட்டம்,

3.பேரூராட்சிகளின் இயக்குநர்,
குறளகம்,
சென்னை